CS (Main) Exam,2019

SDF-U-TML

# தமிழ் / TAMIL

## தாள் I / Paper I

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **250**<br>*Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் ***1, 5*** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக :** *10×5=50*

(a) திராவிட மொழிகளில் தமிழின் தனித்தன்மைகள் *10*

(b) தமிழில் கூட்டு வினைகள் *10*

(c) அற இலக்கியங்களின் வளர்ச்சி *10*

(d) அகப் புறத்திணைகளின் வேறுபாடுகள் *10*

(e) ‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப’ - இக் கூற்றினை உலா இலக்கியங்களோடு பொருத்திக் காட்டுக. *10*

**Q2. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** *15+15+20=50*

(a) தொல்காப்பியத்தின் அமைப்பினையும் சிறப்பினையும் விரித்துரைக்க. *15*

(b) தற்காலத் தமிழில் காணப்படும் ஒலி மாற்றங்களைத் தொகுத்துரைக்க. *15*

(c) சிலம்பல் காப்பியக் கூறுகள் இடம் பெறும் பாங்கினை ஆய்க. *20*

**Q3. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** *20+15+15=50*

(a) தமிழில் பிறமொழிச் சொற்கள் வழங்கும் முறைமையை மதிப்பிடுக. *20*

(b) பக்தி இலக்கியங்கள் சித்தரிக்கும் இறைத் தொண்டின் மேன்மையைப் புலப்படுத்துக. *15*

(c) ஹைக்கூ கவிதைகள் உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகளை ஆய்க. *15*

**Q4.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** ***20+15+15=50***

(a) மணிமேலை உணர்த்தும் பௌத்தக் கோட்பாடுகளை மதிப்பிடுக. *20*

(b) தற்காலச் சிறுகதைகளில் மனித உணர்வுகள் வெளிப்படும் பாங்கினைத் தெளிவுறுத்துக. *15*

(c) புதினங்களில் நனவோடை உத்தி பயன்பெறும் முறைமையை ஆய்க. *15*

## SECTION B

**Q5. பின்வரும் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக :** *10×5=50*

(a) இறைச்சி *10*

(b) பின் நவீனத்துவத் திறனாய்வு *10*

(c) தமிழில் விடுகதைகள் *10*

(d) திருக்குறள் மொழி பெயர்ப்புக்கள் *10*

(e) சோழர் காலக் கட்டடக் கலை *10*

**Q6. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** *15+15+20=50*

(a) சங்க இலக்கியம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்களை விளக்குக. *15*

(b) பழமொழிகளின் அமைப்பு முறைகளைப் புலப்படுத்துக. *15*

(c) ஒப்பியல் கோட்பாடுகளின் அடிப்படையில் சிலப்பதிகாரத்தைப் பிற மொழி இலக்கியம் ஒன்றனோடு ஒப்பிட்டு ஆய்க. *20*

**Q7. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** *20+15+15=50*

(a) நாட்டார் பாடல்கள் வெளிப்படுத்தும் வழிபாட்டு முறைமைகளைத் தெளிவுறுத்துக. *20*

(b) பெண்கள் முன்னேற்றத்தில் மகளிர் இதழ்களின் பங்களிப்பினைப் புலப்படுத்துக. *15*

(c) தமிழ் மொழிக்குப் பௌத்தம் வழங்கிய கொடைகளை மதிப்பிடுக. *15*

**Q8. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் விடை தருக.** *15+20+15=50*

(a) சங்க காலச் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் பதிவு செய்க. *15*

(b) இன்றைய ஊடகங்களில் தமிழ்ப் பயன்பாடு குறித்து ஆய்க. *20*

(c) தமிழ்ச் சமூகத்தில் அரசியலின் தாக்கம் பற்றி விளக்குக. *15*